# இடைக்கால அதிகார சபையின் அமைப்பு வடகிழக்கில் புலிகளின் அதிகாரத்தை நிரந்தரமாக்கும்

எழுவான்கரையான்

இந்த மாத முற்பகுதியில் மட்டக்களப்புப்பகுதியில் உள்ள தங்கள் கட்டுப்பாட்டுப்பகுதியில், புலிகள் தங்கள் முகாம் ஒன்றின் மீதான ஆயதத்தாக்குதல் ஒன்றை எதிர் கொண்டனர். அரசுக்கும் புலிகளுக்கும் இடையே போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் புலிகளின் முகாம் ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட முதல் ஆயதத்தாக்குதல் இது என்று கொள்ளப்படுகிறது. இந்தத்தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுவிட்டதாக புலிகள்தரப்பில் கூறப்பட்டாலும், இந்தத்தாக்குதலின் போது பல புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன், அவர்களின் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாக புலிகளுக்கு எதிரான ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலை அரச தரப்பே மேற்கொண்டதாக புலிகள் குற்றங்சாட்டிய போதும் தமக்கு இதில் எந்தவித சம்பந்தமும் இல்லை இது புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் நடைபெற்றதால் அதுபற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என அரசபடைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலை அடுத்து அரச படையினரைக் குற்றஞ்சாட்டி,எச்சரிக்கை தொனிக்கும் அறிக்கை ஒன்றை புலிகளின் பேச்சாளர் தமிழ்ச்செல்வன் வெளியிட்டிருந்தார். அரசபகுதிகளில் புலிகள் கொலைகளையும், தற்கொலைத் தாக்குதல்களையும் நடத்தியபோதெல்லாம், அதுபற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது, இவை அரச பகுதிகளில் நடைபெற்றன என்பதால் அது பற்றி அரசையே கேளுங்கள் என குதர்க்கமாகப் பதில் தந்தவர் இந்தத் தமிழ்ச்செல்வன். ஆனால்இப்போது தங்கள் பகுதியில் நடைபெற்ற தாக்குதல் பற்றிக் கூறும்போது மட்டும் அதற்கு அரசுபொறுப்பு என அவர் குற்றஞ்சாட்டுகிறார். அப்போது தமிழ்செல்வன் கூறிய அதே பதிலை திருப்பிக் கூறியிருக்கின்றனர் அரச படைத்தரப்பினர்.

அமைதிப் பேச்சுகள் தொடர்பாக அவை நடைபெற வேண்டுமாயின் தமது இடைக்கால சுயஆட்சிஅதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் மாத்திரமே நடைபெற வேண்டும் என புலிகள் புலிகள் விடாப்பிடியாக இருக்கின்றனர். தமது பொம்மைகளான தமிழ்தேசிய கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களை இதுபற்றி வலியுறுத்திப்பிரச்சாரம் செய்யுமாறும் புலிகள் பணித்துள்ளனர். புலிகளின் இடைக்கால சுயாட்சிச் அதிகாரசபை என்பது மந்திரம்போல உச்சரிக்கப்படுகிறதே அன்றி அதன் உள்ளடக்கம்பற்றி யாரும் அலட்டிக்கொள்வதாக இல்லை. இந்த இடைக்கால சுயஆட்சிஅதிகார சபைபற்றிய வரைபு எல்லாத் தமிழர்களாலும் அங்கீகரிக்கரிக்ப்பட்டது போலவும் பாவனை செய்யப்படுகிறது. இதனை பெரிய தமிழ் சட்டமேதைகள் தயாரித்தார்கள் என்று கூறப்பட்டாலும், இந்த சட்டமேதைகள் புலிகள் இட்ட கட்டளைப்படி, அவர்கள் எதனைக் கூறினார்களோ, அதனையே வரைந்தார்கள் என்றேதான் கூற வேண்டும். இந்த இடைக்கால அதிகாரசபை பற்றிய வரைபு வடகிழக்கில் புலிகளின் எதேச்சாதிகார அதிகாரத்தை நிலைநிறுத்தும் அம்சங்களையே உள்ளடக்கியிருக்கிறது. அதில் பல்கட்சி ஜனநாயகத்திற்கு வழிவகுக்கும் எந்த சரத்துகளும் இல்லை. இந்த வரைபை முற்றுமமுழுதாக ஆராய்ந்தால் இதுநன்கு புலப்படும். சட்ட ஆட்சித்தத்துவம், சுயநிர்ணயம், மனித உரிமைகள், சகலரும்சமமானவர்கள் என்ற தத்துவங்களின் அடிப்படையில் இந்த வரைபு மேற்கொள்ளப்படுவதாக மெத்தனமாகக் கூறப்பட்டு இருக்கின்ற போதும், இந்த யோசனைகள் இலங்கையின் வடகிழக்கில் ஒரு பொல்பொட் ஆட்சியை நிறுவும் முதலும் இறுதியுமான படியாகவே அமையும்.

## இடைக்கால அதிகார சபையின் அமைப்பு

வரைபின் சரத்து 2 அதிகார சபையில் புலிகளால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள், அரசினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள், வடகிழக்கு முஸ்லிம் சமூகத்தினால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிப்பார்கள் என்று கூறுகின்ற போதும், புலிகளால் நியமிக்கப்படும் உறுப்பினர்களே அறுதிப்பெரும்பான்மையைக் கொண்டிருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே சபையில் வடகிழக்கில் உள்ள முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகத்தைச்சேர்ந்தவர்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஒருபோதும் பெரும்பான்மையை கொண்டிருக்கமாட்டார்கள். இதனை சரத்து 2 உறுதி செய்கிறது. சபையின் தலைவராக பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்கைப்பெறுபவரே நியமிக்கப்படுவார் என்பதுடன் அவரே இடைக்கால அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் இருப்பார். இந்த ஏற்பாடு புலிகளின் உறுப்பினரே சபையின் பிரதான நிறைவேற்ற அதிகாரம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும். அதுமட்டுமல்ல இடைக்கால அதிகார சபையின் தலைவரே சபைக்கான பிரதான நிர்வாக அதிகாரியை மட்டுமல்ல, சகல அதிகாரிகளையும் நியமிக்கும் தகுதி கொண்டிருப்பார். அந்த நியமனங்களை இடைநிறுத்தும், முடிவுக்குக் கொண்டுவரும் அதிகாரமும் அவரிடமே இருக்கும் என்பதால் சபையின் தலைவரே ஏகபோக அதிகாரம்கொண்ட சர்வாதிகாரியாக இருப்பார். அவரின் நியமனங்களையோ,அல்லது பதவிநீக்கங்களையோதட்டிக்கேட்கும் அதிகாரம், சபையின் மற்ற எந்த உறுப்பினர்களுக்கோ அல்லது நீதிமன்றத்திற்கோ அல்லது நாட்டின் ஜனாதிபதிக்கோ அல்லது வேறு எவருக்குமே இருக்காது. ஒருஜனநாயக அமைப்பில் இருக்கவேண்டிய அதிகாரங்களை மட்டுப்படுத்தும் எந்த சமநிலைப்படுத்தும் ஏற்பாடுகளோ விதிகளோ புலிகளின் வரைபில் இல்லை. தேர்தல்கள் நடைபெற்று முடியும்வரையில் அதாவது 5 வருடங்களுக்கு இடைக்கால அதிகாரசபையே ஆட்சியில் இருக்கும் என்பதால்,அதுவரையில் சபைத்தலைவரே தனிக்காட்டு ராஜாவாக வடகிழக்கில் ஆட்சிசெலுத்துவார்.

## தேர்தல்கள்

தேர்தல்கள் இணக்கம் ஏற்பட்டு 5 வருடங்களின் முடிவில் நடைபெறவேண்டும். ஆனால் இந்தத் தேர்தல்களை இடைக்கால அதிகார சபையினால் நியமிக்கப்படும் தேர்தல் ஆணையகமே நடத்தும். .ஆணையகம் சுதந்திரமான ஆணையகமாக இருக்கும் எனக்கூறப்பட்டு இருக்கின்ற போதிலும் இந்த சுதந்திரம் எப்படி உறுதிப்படுத்தப்படும் என்று எதுவும் தெரிவிக்கப்படவில்லை. சர்வதேச மேற்பார்வையில், சர்வதேச ஜனநாயக கோட்பாடுகள், தராதரங்கள் என்பவற்றிற்கு அமைவாக சுதந்திரமாகவும், நியாயமான முறையிலும் தேர்தல் ஆணையகம் தேர்தலை நடாத்தும் எனவும் கூறப்பட்டிருக்கிறது. புலிகளால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களை பெரும்பான்மையாக கொண்ட இடைக்கால அதிகார சபையினால் நியமிக்கப்படப்போகும் இந்த தேர்தல் ஆணையகம் எத்தனை அங்கத்தவர்களைக்கொண்டதாக இருக்கும் என்றோ, அதில் யார் பெரும்பான்மையை கொண்டிருப்பார்கள் என்றோ கூட ஏற்பாடுகள் எதுவும் இல்லை. இலங்கையைப் போல பிரச்சனை நிலவிய நாடுகளில் சமாதான ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் நடைபெற்ற பெரும்பாலான தேர்தல்கள் ஐக்கிய நாடுகள் சபையினாலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன. கம்போடியாவில் நடைபெற்ற தேர்தல், கிழக்குரிமோரில் நடைபெற்ற தேர்தல் என்பன  ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் வெற்றிகரமாகவும், சுதந்திரமாகவும் நடத்தப்பட்டன. அங்கெல்லாம் தேர்தல் ஆணையங்களை போரில் ஈடுபட்டிருந்த எந்தத்தரப்புமோ நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் புலிகளின் வரைபில், தேர்தல் ஆணையகத்தை நியமிக்கும் அதிகாரம் போரில் ஈடுபட்டிருந்த தரப்பான புலிகளினால் நியமிக்கப்படும் அதிகார சபைக்கே வழங்கப்படுகிறது. அதுவும், புலிகளினால் நியமிக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட சபைத்தலைவரின் ஏகபோக அதிகாரம் நடைபெறும் ஒரு சூழ்நிலையில் நடைபெறப்போகும் தேர்தலின் சுதந்திரத்தன்மையும் நியாயத்தன்மையும் எப்படி உறுதிப்படுத்தமுடியும்.

கடந்த இலங்கைப் பாராளுமன்ற தேர்தலில் புலிகள் நடத்திய தேர்தல் மோசடிகளை ஐரோப்பிய சமூகம் உள்ளிட்ட எத்தனையோ பக்கச்சார்பற்ற அமைப்புகளும் கண்டித்திருந்தன. ஒரு இலங்கைப் பாராளுமன்ற தேர்தலிலேயே இத்தனை தில்லுமல்லுகளையும், மோசடிகளையும் செய்த புலிகள், தங்கள் அதிகாரம் நடைபெறும் வடகிழக்கின் இடைக்கால நிர்வாகத்தில், அதுவும் தங்கள் எதிர்காலத்தையே நிர்ணயிக்கப்போகும் ஒருதேர்தலில் மாகாத்மாவாகவா நடப்பார்கள்?.

## மனித உரிமைகள்

வடகிழக்கு மக்களுக்கு சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சகல மனித உரிமைகளும் வழங்கப்படும் எனக்கூறப்பட்டிருக்கிறது. இடைக்கால அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள், சட்ட ஏற்பாடுகள் என்பன சர்வதேச மனித உரிமைகள் தரத்திற்கு அமைவாக இருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை உறுதிப்படுத்தப்போவது இடைக்கால அதிகார சபையினால் நியமிக்கப்படப்போகும் மனித உரிமைகள் ஆணையகமேயாகும். இந்த ஆணையகம் சுதந்திரமான ஆணையகமாக இருக்கும் எனக்கூறப்பட்டிருக்கின்ற போதிலும், அதன் சுதந்திரத்தன்மை எப்படிப் பாதுகாக்கப்படப்போகிறது என்றோ, அதன் அதிகாரங்கள் எத்தகையதாக இருக்கப்போகிறது என்றோ ஏற்பாடுகள் எதுவும் கூறப்பட்டிருக்கவில்லை. மீண்டும் மீண்டும் இளவயது சிறுவர்களை படையில் சேர்க்கும் புலிகள், தமது எதிராளிகளை குரூரமாக கொல்லும் புலிகள், பேச்சுச்சுதந்திரம் உள்ளிட்ட அனைத்து மனித உரிமைகளையும் காலில் போட்டு மிதிக்கும் புலிகள் தமது இடைக்கால நிர்வாகத்தில் எப்படி மனித உரிமைகளை மதிக்கப்போகிறார்கள். இவர்களின் ஆட்சியில் எப்படி ஒரு மனித உரிமைகள் ஆணையகம் சுதந்திரமாக செயற்படமுடியும்?. இவையே புலிகளின் அதிகாரத்திற்குள் வரும் ஒரு அமைப்பில் மனித உரிமைகள் தொடர்பாக எழுப்பப்படப்போகும் நியாயமான கேள்விகளாகும்.

## மதச்சார்பின்மை, லஞ்சஊழல்ஒழிப்பு, பாரபட்சம்காட்டாமை, சகல சமூகங்களையும்பாதுகாத்தல்

வடகிழக்கில் எந்த மதத்திற்கும் முதன்மைஇடம் வழங்கப்படமாட்டாது எனவும், மதம், இனம், சாதி, தேசிய பிரதேச தோற்றுவாய், வயது,பால் என்பன தொடர்பாகஎந்தவிதபாகுபாடும் காட்டப்படமாட்டாது .இருப்பதை இடைக்கால அதிகாரசபை உறுதிப்படுத்தும் எனவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் கலாச்சாரம் அல்லது மதம் தொடர்பாக வேறுசமூகங்கள் மீதுவிதிக்கப்படாத எந்தவித சலுகைவழங்கும் அல்லது குறைபாட்டை ஏற்படுத்தும் சட்டமோ,பிரமாணமோ, விதியோ,கட்டளையோ அல்லது தீர்மானமோ ஏனைய எந்த சமூகத்தின்மீதும் கொண்டுவரப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமதுநிர்வாகத்தில் லஞ்சமோ அல்லது ஊழலோ அனுமதிக்கப்படமாட்டாது எனவும் கூறப்பட்டுள்ளது. .இவைமிக முற்போக்கான ஏற்பாடுகளே என்பதில் ஐயமில்லை. இந்த ஏற்பாடுகளுக்காக புலிகளைப்பாராட்டவேண்டும்.

## இடைக்கால நிர்வாக சபையின் நியாயாதிக்கம்

இந்த விடயமே இடைக்கால அதிகாரசபை ஒன்றை ஏற்படுத்துவதில் இருக்கப்போகும் மிகப்பெரும் தடையாக உருவாகும் என எதிர்பார்க்கலாம். வடகிழக்கின் நிர்வாகம் தொடர்பான முழு அதிகாரமும் இடைகால அதிகாரசபையிடம் இருக்கும் எனபுலிகளின் வரைபுகூறுகிறது. குறிப்பாக நிலம், சட்டம், வரி,திறை,மற்றும் வசூல்கள்போன்றவற்றின் மூலம்வருமானம் திரட்டல், மீள்குடியமர்வு,புனர்வாழ்வு,புனர்நிர்மாணம், மற்றும் தற்போதைய சேவைகள்,வசதிகள் என்பவற்றை தரமுயர்த்தல் முன்னேற்றல் உள்ளிட்ட அபிவிருத்தி தொடர்பான அனைத்து அதிகாரங்களும் இடைக்கால அதிகாரசபையிடம் இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் பிராந்திய நிர்வாகம் தொடர்பாக வடகிழக்கில் இலங்கைஅரசு நடைமுறைப்படுத்திவரும் எல்லாஅதிகாரங்களும் செயற்பாடுகளும் இடைக்கால அதிகாரசபையின் அதிகாரங்களில் உள்ளடக்கப்படும் எனவும் வரைபில் மேலும் கூறப்பட்டுள்ளது. இந்த சரத்தின் மூலம் வடகிழக்கில் சகல ஆட்சிஅதிகாரங்களும் தமது இடைக்கால அதிகாரசபைக்கே வழங்கப்படவேண்டும் எனப் புலிகள் கேட்கின்றனர். வடகிழக்கின்சகல நிர்வாக அதிகாரங்களும் இடைக்கால அதிகாரசபைக்கு வழங்கப்பட்டால், மத்தியில் இருக்கக்கூடிய இலங்கைஅரசுக்கு வடகிழக்குத்தொடர்பாக எந்தவித நிர்வாக அதிகாரமும் இருக்கமாட்டாது.

## அதிகாரப் பகுப்பாக்கம்

வடகிழக்கின் ஆட்சி அதிகாரம் மட்டும் அல்ல நீதிநிர்வாகம் முழவதுமே இடைக்கால அதிகார சபையிடமே கையளிக்கப்படவேண்டும் என புலிகளின் வரைபு கூறுகிறது. வடகிழக்கிற்கு பிரத்தியேகமான நீதிநிர்வாக அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும், அத்தகைய நீர்வாக அமைப்புகளிடமே வடகிழக்கின் நீதிநிர்வாகம் ஒப்படைக்கப்படவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இவற்றிற்கும் மேலாக புலிகட்கும் அரசுக்கும் .இடையேயான இணக்கத்தை வியாக்கியானம் செய்வது நடைமுறைப்படுத்துவது என்பன தொடர்பான தனியானதும் பிரத்தியேகமுமானதுமான நியாயாதிக்கம் வடகிழக்குநீதி அமைப்புகளிடமே இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த பிரத்தியேகமான நீதிஅமைப்புகளை அமைக்கும் அதிகாரமும் அவற்றை கட்டுப்படுத்தும் அதிகாரமும் யாருக்கு இருக்கும் என குறிப்பிடப்படவில்லை. புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தனியான நீதிநிர்வாக அமைப்பை ஏற்படுத்தி செயற்படுத்திவரும் இந்த வேளையில் இடைக்கால நிர்வாகத்தின்போது அந்தப் புலிஅமைப்புகளின் செயற்பாடு என்னவாக இருக்கும் என்பது தெளிவாக்கப்படவில்லை. இருப்பினும் ஒப்பந்தம் பற்றிய பிரச்சனைகள் ஏற்படும்போது அவற்றைத்தீர்ப்பதற்கான நடுவர்மன்றம் பற்றிய பிறிதொரு ஏற்பாடும் கூறப்பட்டுள்ளது. 22வது சரத்தின்கீழ் கூறப்பட்டுள்ள இந்த ஏற்பாட்டின்படி, நடுவர்மன்றத்திற்கு செல்வதற்கு முன்பதாக பிரச்சனை, நோர்வே அரசாங்கம் உள்ளிட்ட ஏற்புடைய மார்க்கங்கள் மூலமாகத்தீர்வு தேடப்பட வேண்டும் என்றும் இறுதியாகவே தீர்ப்பாய நடுவர்மன்றத்திற்கு பிரச்சனை எடுத்துச்செல்லப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடுவர்மன்றத்தில் இருதரப்பினாலும் நியமிக்கப்படும் தலா ஒரு நபருடன் இருதரப்பினரும் கூட்டாக சம்மதித்து நியமிக்கும் ஒருவரும் இருப்பார் என்பதுடன், இந்த 3வது நபரே தீர்பாய நடுவத்திற்கு தலைவராகவும் இருப்பார். 3வது உறுப்பினாக யாரை நியமிப்பது என்று இருதரப்பாரும் இணக்கப்பாட்டிற்கு வரமுடியாத சந்தர்ப்பத்தில் அந்த நியமனத்தைச் செய்யுமாறு சர்வதேச நீதிமன்றத் தலைவரை இருதரப்பாரும் கேட்கவேண்டும் எனவும் ஏற்பாடு கூறப்பட்டுள்ளது.

## நிதி

வடகிழக்கில் நிதி தொடர்பான சகல கட்டுப்பாடுகளும் இடைக்கால அதிகாரசபைக்கே இருக்கும். சபையினால் நியமிக்கப்படும் நிதி ஆணைக்குழுவே நிதி தொடர்பான விடயங்களிற்கு பொறுப்பாக இருக்கும் என்பதுடன் மூன்று நிதியங்கள் உருவாக்கப்படும். வடகிழக்குப்பொது நிதியம்., வடகிழக்கு புனர்நிர்மாண நிதியம், விசேடநிதியம் என உருவாக்கப்படும் இந்த நிதியங்களே வெளிநாட்டுநிதிகள் உட்பட அனைத்து நிதிகளையும் கட்டுப்படுத்தும். வடகிழக்கின் புனர்நிர்மாணத்திற்கென வெளிநாடுகள் வழங்கும் நிதி உதவிகள் அனைத்தும் வடகிழக்கு புனர் நிர்மாண நிதியத்தின் மூலம் மட்டுமே பெறப்பட்டு, இடைக்கால சபையின் நேரடியான மேற்பார்வையின் கீழ்பயன்படுத்தப்படும். இந்த நிதிஏற்பாடுகள் வடகிழக்குப் புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான அனைத்து ஏற்பாடுகளிலும், இலங்கை அரசின் தலையீட்டையோ ஆளுகையையோ தவிர்க்கும் நோக்கில் வரையப்பட்டுள்ளதைக்காண முடிகிறது. மேலும் இங்கே நிதிக்குப் பொறுப்பான ஏற்பாடுகள் அனைத்தும், புலிகளின் கட்டுப்பாட்டில் வருவதைஅவதானிக்கவேண்டும். புனர்நிர்மாணம் அபிவிருத்தி என்ற பெயரில் புலிகள் தங்கள் அமைப்பிற்கோ, அல்லது தாங்கள் விரும்பியவற்றிற்கோ நிதிகளைப்பயன்படுத்தும் துஸ்பிரயோக நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவோ,கேள்விக்கு உட்படுத்தவோ எவராலும் இயலாததாக இருக்கும் என்பது தெளிவாகிறது. புலிகள் ஏற்கனவே பலவித வரிஅறவீடுகள்மூலம் பெறும் பணத்தை மக்களின் நலனுக்காக அன்றி தமது இயக்கத்தேவைக்கே பயன்னடுத்திவருகின்றனர். இடைக்கால நிர்வாகத்தின்போது புலிகள் இந்த ஏற்பாடுகளினால் தமது இயக்கத்தை மேலும் பலப்படுத்திக்கொள்வர் என்பது கண்கூடு.

## கடன் பெறுதல் நிதி உதவிகளைப்பெறுதல் மற்றும் வர்த்தகம் தொடர்பான அதிகாரங்கள்

இடைக்கால நிர்வாகசபை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடன் பெறவும், நேரடியாக நிதியுதவிகளைப் பெறவும், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடவும்,
அவற்றைக் கட்டுப்படுத்தவும் அதிகாரம் கொண்டதாக இருக்கும். இந்த ஏற்பாடும் நிதிஉதவி பெறுதல் ,வெளிநாட்டுவர்த்தகம் என்பன கொடர்பாக இலங்கை மத்திய அரசுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை வெறிதாக்கிவிடுகிறது.

## கணக்காய்வு

.இடைக் கால சபையே ஒரு கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும். கணக்காய்வாளர் எல்லாநிதியங்களினதும் கணக்குகளை ஆய்வு செய்வார். ஏனினும் இடைக்கால சுயாட்சி சபையால் நியமிக்கப்படும் சர்வதேச நிறுவனம் ஒன்றே வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் எல்லா பண உதவிகளையும் ஆய்வு செய்து அங்கீகரிக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது. இந்தக்கணக்காய்வு ஏற்பாடுகளும் நிதிதொடர்பான புலிகளின் கட்டுப்பாட்டை இறுக்கமாக்கும் என்றே கூற வேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய சபையினால் நியமிக்கப்படும் நிறுவனம் ஒன்று அது எத்தகைய சர்வதேசப்புகழ் பெற்றதாக இருந்தாலும் தான் தொடர்ந்து நியமனம் பெறுவதற்காக புலிகளின் நிதிச்செயற்பாடுகளை அங்கீகரிக்கவே செய்யும். இதே போன்றே புலிகளின் சபையினால் நியமனம் பெறும்கணக்காளர் நாயகமும் ரப்பர் முத்திரையாகவே இருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆக சபையின் நிதி ஏற்பாடுகள்,கணக்காய்வு ஏற்பாடுகள் அனைத்தும் புலிகளைக் கேள்விக்குட்படுத்தாத வகையிலான ஏற்பாடுகளாகக் கச்சிதமாக வரையப்பட்டுள்ளன.

## மாவட்டக் குழுக்கள்

மாவட்டங்களில் நிர்வாகத்தை நடத்த சபையினால் நியமிக்கப்படும் மாவட்டக்குழுக்கள் நிறுவப்படலாம். இந்தக் குழுக்களின் தலைவர் உள்ளிட்ட ஏனைய அங்கத்தவர்கள் சபையினாலேயே நியமிக்கப்படுவர் என்பதுடன் இந்தக்குழுக்கள் சபையின் நேரடிக்கட்டுப்பாட்டிலேயே செயல்படமுடியும். இது புலிகளின் அதிகார எல்லையை மாவட்டங்களுக்கு நேரடியாக விஸ்த்தரிக்கும் நடவடிக்கையே தவிர வேறில்லை.

## காணி நிர்வாகம்

காணி நிர்வாகம் தொடர்பாக கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள் எதிர்காலத்தில் பெரும் சிக்கல்னளையும் இனமோதல்களையும் உருவாக்கக்கூடியதாக அமைந்துள்ளன. வடகிழக்கில் உள்ள தனியாருக்கு சொந்தமில்லாத அனைத்துக் காணிகள் தொடர்பான அதிகாரங்களும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய இடைக்கால சுயாட்சிசபைக்கே இருக்கும். அரச காணிகளை வழங்கல், அவற்றின் பயன்பாடுகளைத் தீர்மானித்தல் ஆகிய அதிகாரங்கள் அனைத்தும் .இந்தசபைக்கே உண்டு. அதனைவிட சிக்கல்களையும் மோதல்களையும் உருவாக்கக்கூடியது சபையினால் நியமிக்கப்படவேண்டிய காணி நிர்வாகம் தொடர்பான விசேட ஆணைக்குழுவாகும்.. இந்த ஆணைக்குழுவிற்கு காணிபறிக்கப்பட்ட மக்களின் உரிமைகள் தொடர்பாகவும், அத்துமீறி குடியேறிய காணிகள் தொடர்பாகவும் விசாரித்து அறிக்கை செய்யும் அதிகாரம் உண்டு. அத்துமீறிக் குடியேறிய காணிகள் அவை எத்தனை ஆண்டுகளிற்கு முன்னர் பெறப்பட்டு, ஆட்சி உரிமை பெற்றிருந்தாலும் அவை தொடர்பாக இந்த விசேட காணிநிர்வாக ஆணைக்குழு விசாரணை மேற்கொள்ள முடியும். வடகிழக்கில் ஆயிரக்கணக்கான அரச காணிகளில் பல சமூகத்தினரும் அத்துமீறி குடியேறி ஆட்சியுரிமை பெற்றிருக்கின்றனர். இந்த ஆணைக்குழு இவர்களை அக்காணிகளில் இருந்து வெளியேறச் செய்யப் பரிந்துரை செய்யும் பட்சத்தில் இந்த நடவடிக்கை இனக்கலவரங்களையும், இனமோதல்களையும் ஏற்படுத்தவே செய்யும் என்பதில் ஐயமில்லை. புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடிய இடைக்கால சுயாட்சி சபையினால் நியமிக்கப்பட வேண்டிய இந்த காணிநிர்வாகம்தொடர்பான விசேட ஆணைக்குழுவிற்கு சபை பல அதிகாரங்களையும் வழங்கவும் புலிகளின் வரைபில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை, இந்த ஆணைக்குழுவின் தீர்மானங்கள் நீதிமன்றங்களினால் கூட கேள்விக்கு உட்படுத்த முடியாதனவாக இருக்க செய்யும்.

## கடல்வாழ் வளங்களும், கடற்பிராந்திய வளங்களும்.

இடைக்கால சுயாட்சிசபை கடல்வாழ்வளங்கள், கடற்பிராந்திய வழங்கள் என்பவற்றைக் கட்டுப்படுத்தவும் அவற்றின் பயன்பாட்டை நிர்வாகம் செய்தல் போன்றவற்றிலும் அதிகாரம் கொண்டதாக இருக்கும். இந்த ஏற்பாட்டினால் வடகிழக்குக் கடற்பிராந்தியத்தை பொறுத்த அளவில் மத்திய அரசிற்குஇருக்கக்கூடிய

கட்டுப்பாடுகள் அறவே ஒழிக்கப்படும். மீன்வளங்களையும், கடற்பிராந்திய எண்ணை வளங்களையும் புலிகள்தமக்கு வேண்டிய நாடுகட்கோ, அமைப்புகளுக்கோ வழங்க இந்த ஏற்பாடு வழிவகுக்கும். இந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தி புலிகளின் நேச நாடாகிய நோர்வே போன்ற நாடுகள் வடகிழக்கு கடல்வளங்களை சுரண்ட அனுமதிக்கப்படலாம். நோர்வே சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை என்ற குற்றச்சாட்டு இதன்பால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

## இயற்கை வளங்கள்.

வுடகிழக்கின் இயற்கை வளங்கள் தொடர்பான அனைத்து கட்டுப்பாடும் இடைக்கால சுயாட்சி சபையிடமே இருக்கும். இந்த வளங்கள் தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்கள் தொடர்ந்து இருக்குமாயினும், அந்த ஒப்பந்தங்களின் கீழான அனைத்துப் பணவரவுகளும் இலங்கை அரசினால் இடைக்கால சுயாட்சிசபையிடம் செலுத்தப்பட வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்களில் எதிர்காலத்தில் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமாயின், அவை இடைக் கால சுயாட்சிசபையின் சம்மதத்துடனேயே செய்யப்படமுடியும். அத்துடன் இயற்கை வளங்கள் தொடர்பான எந்த எதிர்கால ஒப்பந்தங்களும், சுயாட்சிசபை உடனேயே செய்யப்படவேண்டும். இயற்கை வழங்கள் என்று கூறும்போது இப்பதம் இயற்கைத் துறைமுகமான திருமலைத்தறைமுகத்தையும் உள்ளடக்கும். அத்துடன் திருமலைத் துறைமுகத்திற்கு அண்டிய பகுதியில் நிலத்திற்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள எண்ணை தாங்கிகளும் இதில் உள்ளடங்கலாம். ஏனவே தற்போது இந்த எண்ணைத்தாங்கிகளின் பயன்பாட்டைப் பெற்றுள்ள இந்திய கம்பனியுடனான எந்த எதிர்கால ஒப்பந்தமும் புலிகளின் ஒப்புதலுடனேயே செய்யப்படமுடியும். இலங்கை அரசு அமெரிக்க கடற்படையுடன் திருமலைத் துறைமுக பயன்பாடு தொடர்பாக செய்துள்ள ஒப்பந்தங்கள் ஏதேனும் இருந்தால் கூட எதிர்காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் வரக்கூடிய வடகிழக்கு இடைக்கால ஆட்சிசபையின் அங்கீகாரத்தை பெறவேண்டியிருக்கும்.

## நீர்ப்பயன்பாடு

நதிகளின் பயன்பாடு தொடர்பாக கூறப்பட்டுள்ள ஏற்பாட்டில் நதி ஊற்றெடுக்கும் மேற்பகுதியின் பயன்பாட்டைப்பெற்றவர்கள் அந்த நதியின் அடிப்பகுதி பயன்பாட்டாளர்களின் நியாயமான பயன்பாட்டை கருத்தில் கொள்ளக் கடமைப்பட்டவர்கள் என்ற சர்வதேச கோட்பாடு உறுதிப்படுத்தப்படவேண்டும் ஏனக் கூறப்பட்டுள்ளது. இங்கே ஏற்புடையதாக இருக்கக்கூடியது மகாவலி கங்கை நதியின் நீர்ப்பயன்பாடாகும். இதனைக்கருத்திகொண்டே இந்த சரத்து சேர்க்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது.

## ஒப்பந்தத்தின் நடைமுறைக்காலம்

இந்த இடைக்கால சுய ஆட்சிசபைக்கான ஒப்பந்தம் இறுதி நிரந்தர தீர்மானம்ஒன்றின் பின்னர் உருவாகும் புதிய வடகிழக்கு அரசு ஒன்று உருவாக்கப்படும்வரை நடைமுறையில் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. 4வருடங்களின் பின் இறுதித் தீர்மானம் தொடர்பாக இணக்கம் ஒன்று ஏற்படாதவிடத்து தற்போதைய ஒப்பந்தத்தில் ஏதாவது சேர்த்துக்கொள்வது, தெளிவாக்குவது, மற்றும் உறுதியாக்குவது தொடர்பாக நல்லெண்ண அடிப்படையில் இருதரப்பாரும் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்தப்பேச்சுக்கள் எத்தனை வருடங்களும் சடைபெறலாம் என்பதுடன் இதன்காரணமாக இடைக்கால சுயாட்சிசபையின் நிர்வாகம் 5 வருடங்களுக்கு அல்ல புலிகள் ஏதாவது சாக்குப்போக்கு சொல்லி நிரந்தரதீர்மானத்தை இழுத்தடித்தால் 10 வருடங்களோ 15வருடங்களோ நீடிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. புலிகள் தற்போது இடைக்கால நிர்வாகத்தைக் கேட்டாலும் இந்த நிர்வாகம் புலிகள் விரும்பினால் எல்லையற்ற காலதிற்கு நீடிக்கப்படமுடியும். தமிழர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் புலிகளின் இடைக்கால நிர்வாகத்தை அகற்ற முடியாதிருக்கும். புலிகள் இந்.த இடைக்கால சுய ஆட்சிக்கான சட்ட வரைபு, போரிடாமலே தமிழ் ஈழத்தை அடைவதை உறுதிப்படுத்துகிறது. அத்துடன் இந்த வரைபு தமிழ்மக்களின் நலனைக்கருத்தில் கொண்டன்றி புலி இயக்கத்தின் நலனைக்கருத்தில் கொண்டே வரையப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது. புலிகள் நிதிவளங்களை தமது இயக்கத்திற்குப் பயன்படுத்துவதை தடுக்கமுடியாதிருக்கும். தற்போதைய புலிகளின் நடவடிக்கைகள் அவர்கள் தமிழ்மக்களின் உரிமைகளுக்கு அன்றி தமது இயக்க எதிர்காலத்தை கருத்தில் கொண்டே செயற்படுகிறார்கள் என்பதைத் தெளிவாக்குகிறது. புலிகள் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டிருந்தால், யாழ்ப்பாணம்செல்லும் ஏ9 பாதையில் ஏன் வரி அறவிடவேண்டும். யாழ்ப்பாண மக்கள் வரி செலுத்தாது ஏனைய பாதைகளில் போல இலவசமாகச் சென்றுவர அனுமதிக்கலாம்தானே. இந்த வரி புலி உறுப்பினர்களின் செலவுகட்குத்தானே பயன்படுத்தப்படுகிறது. புலிகளின் இலட்சியம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பது அல்ல தமது பாசிச ஆட்சியை நிறுவுதலே.